# <u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.</u>

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 30–ஆம் நாள், செவ்வாய்கிழமை

**<u>இ.ம.எண். 4/2023 இன் இ.ம.எண். 2/2022 இன்</u>**

**<u>அ.வ.எண்.763/2004</u>**

**<u>CNR No. TNSA13-000036-2004</u>**

1. தங்கராஜி
2. மனோன்மணி . . . மனுதாரர்கள் வாதிகள்

/எதிராக/

1. தனி அலுவலர், புங்கவாடி பஞ்சாயத்து
2. நடராஜன் (இறந்தவர்) . . . 1, 2 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
3. ஜோதி
4. மனோரஞ்சிதம்
5. சதீஷ்கண்ணா . . . 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/2ம் பிரதிவாதியின் வாரிசுகள்

* This petition is ameded as per order in IA.No.6/2025, dt.22.08.2025

இம்மனுவின் மீதான விசாரணையானது, கடந்த 25.06.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.ராஜேந்திர மகஜன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ராமதாஸ் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/2ம் பிரதிவாதியின் வாரிசுகள்

தோன்றாதரப்பினர்களாக கருதப்பட்டும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

இம்மனுவானது கடந்த 01.03.2023ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்ட இ.ம.எண்.2/2022 மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 9ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர் என்றும், 2ம் மனுதாரருக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுவில் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு படி மெமோ தாக்கல் செய்ய கடந்த 01.03.2023ம் தேதி வாய்தா போடப்பட்டு, அதன்படி படி மெமோவும் தாக்கல் செய்ததாகவும், மேற்படி படி மெமோவில் சில குறைபாடுகள் இருந்தமையால் ரிட்டன் ஆகிவிட்டது என்றும், ரிட்டன் ஆன படி மெமோ வழக்கறிஞர் அலுவலகத்தில் பழைய கட்டுகளுடன் கலந்து விட்டதால் அன்று சமூகம் கோர்ட்டார் அழைத்தபோது represent செய்ய இயலாமல் போய்விட்டதாகவும், மனுதாரருக்கும் உடல்நிலை சரியில்லாமல் போனதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை என்றும், எனவே மனு ஒருதலைபட்சமாக தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மேற்படி மனுவில் மனுதாரர்களுக்கு நல்ல வியாஜ்ஜியமும், வழக்கு மூலமும் உள்ளது என்றும், எனவே மேற்படி 01.03.2023ம் தேதியன்று தள்ளுபடி செய்யப்பட்ட மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் 1ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். மனுதாரரால் இ.ம.எண்.2/2022 என்ற மனு 04.01.2022ம் தேதி தாக்கல்

செய்யப்பட்டதாகவும், அதற்கு 14 மாதங்கள் கடந்து படி மெமோ கட்டாததாலும், மனுதாரர் ஆஜராகாததாலும் தான் தள்ளுபடி செய்யப்பட்டது என்றும், அதன்படி 01.03.2025ம் தேதி தள்ளுபடி செய்யபட்ட மனுவை எடுக்க நோட்டீஸ் அனுப்ப 20.04.2023ம் தேதி வாய்தா கொடுக்கப்பட்டது என்றும், ஆனால் மனுதாரர் 20.04.2023 முதல் 10.04.2026 வரை நோட்டீஸ் அனுப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், மாறாக பொய்யான காரணங்களை கூறி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், அதனால் இம்மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், மேலும் படி மெமோவை Represent செய்ய ஏற்பட்ட காலதாமத்திற்கு மனுவில் சரியான காரணங்கள், சான்றுகள் அளிக்கப்படவில்லை என்றும், எனவே இம்மனுவை 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

5. இம்மனுவின் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியான நடராஜனின் வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க இ.ம.எண்.2/2022 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அம்மனுவானது படி மெமோ தாக்கல் செய்ய கடந்த 01.03.2023ம் தேதி வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் அன்றைய தினம் படி மெமோவை Represent செய்யாத காரணத்தால் மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. எனவே அம்மனுவை மீண்டும் கோப்பிற்கு எடுக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்ப்பட்டுள்ளது.

மாறாக 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இ.ம.எண்.2/2022 என்ற மனுவானது 04.01.2022ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 14 மாதங்கள் கடந்தும் படி மெமோவை கட்டாததாலும், மனுதாரர் ஆஜராகததாலும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாகவும், எனவே இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், படி மெமோவை Represent செய்ய ஏற்பட்ட காலதாமதத்திற்கு மனுவில் சரியான

காரணங்கள் கூறவில்லை என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என ஆட்சேபனை செய்துள்ளார்.

வழக்கானது வாதிகளால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் இறந்து போன 2ம் பிரதிவாதியின் வாரிசுகளை வழக்கில் தரப்பினர்களாக சேர்த்து இவ்வழக்கை நடத்துவதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே இறந்துபோன 2ம் பிரதிவாதியின் வாரிசுகளை தரப்பினர்களாக சேர்க்க மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் ஆன அபேட்மெண்ட்–ஐ ரத்து செய்ய வேண்டி தாக்கல் செய்த மனுவினை மீண்டும் கோப்பிற்கு எடுத்துக்கொள்வது அவசியம் என இந்நீதிமன்றம் முடிவு செய்து இம்மனுவானது கீழ்க்கண்ட நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது.

6. தீர்வு

இறுதியாக இம்மனு நிபந்தனையின் பேரில் அனுமதிக்கப்பட்டு மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரருக்கு ரூ.2,000/–ஐ இம்மனுவின் செலவுத்தொகையாக 07.07.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 07.07.2026.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, ஜூன் திங்கள், 30–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.06.30 19:02:22 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

1. மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI

Digitally signed by D JANSIRANI
Date: 2026.06.30 19:02:29 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**<u>மு.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம. எண். 04/2023 இன்
இ.ம. எண். 02/2022 இன்
அ.வ. எண். 763/2004
நாள் : 30.06.2026